email: manichudar786@yahoo.com Ph: 2521 7890 Posted without pre-payment at Egmore Sorting Office. Manichudar (Tamil Daily) RNI 42728/87 REGD. No.TN/CNI GPO/006/2010To2012/TN Pr.CPMG/WPP/55/2010-2012

Cable: MONOPOLY POST BOX No. 3748
Majestic Motors
117, GENERAL PATTERS ROAD,
CHENNAI-600 002.
Ph: 28600937 - 28600938

உண்மை சொல்வோம் – நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

நிறுவனர் : சிராஜுல்மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது

வாய்மையும், நம்பிக்கையும் பெற்ற வளம் மிகுந்த
நிறுவனம் - கட்டிடங்கள் வாங்க - விற்க,
வாடகை வசூல் செய்ய புகழ் பெற்றது



அல்ஹாஜ் எஸ்.எம். பதுருதீன்
ஜம் ஜம் ரியல் எஸ்டேட்
257, பைகிராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை – 600 005.
போன் : 044 - +91 44 2841 5901 / 2841 5902 / 2858 3450
E-mail : zamzam501@rediffmail.com

மணி-26 சுடர்-50 ஹிஜ்ரி 1433 ரஜப்-29 பக்கம் 4 விலை ரூ. 3 ஆண்டு சந்தா ரூ.1000 திருவள்ளுவர் ஆண்டு-2043 ஆனி-6 சென்னை 20-6-2012 புதன் வெளியூர் 21-6-2012 வியாழன்

## இந்திய குடியரசு தலைவர் தேர்தல்:

# முடிவெடுக்க முடியாமல் பா.ஜ.க.,திணறுகிறது

## சாதனை புரியும் சீரிய ஆயுதம் 'மணிச்சுடர்' அதனை வலிமைப்படுத்தி விரிவுபடுத்துவோம்!

கடந்த வாரம் சென்னை காயிதெ மில்லத் மன்ஸிலில் 'மணிச்சுடர்' சம்பந்தமான மிக முக்கிய ஆலோசனைக்கூட்டம் நடந்தது.

'மணிச்சுடர்' துவக்கப்பட்டு, இப்பொழுது தனது 26–வது ஆண்டுப் பயணத்தில் இந்த சமுதாய நாளேடு சென்று கொண்டிருக்கிறது.

விழுப்புரத்தில் நடைபெற்ற இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில செயற்குழுவில், 'மணிச்சுடர்' 25–வது ஆண்டு நிறைவை வெள்ளிவிழாவாகக் கொண்டாட வேண்டியதன் அவசியம் பற்றியும், அதை ஒட்டி 25 ஆண்டு காலத்தில் 'மணிச்சுடரில் பிரசுரமாகியுள்ள சரித்திரம் சமைக்கும் செய்திகளைத் தொகுத்துக் 'காலச்சுவடுகள்' மலர் ஒன்றும் வெளியிடுவது பற்றியும் பேசப்பட்டு, அதற்கான அறிவிப்புகளும் செய்யப்பட்டன.

அது தொடர்பான செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் நோக்கத்தில்தான் 'மணிச்சுடர்' ஆசிரியர், வெளியிடுபவர், செய்திஆசிரியர், உதவி ஆசிரியர்கள், நிருபர்கள், முகவர்கள், புகைப்பட நிபுணர்கள், 'மணிச்சுடர்' வெளியிடும் மலரை மக்களிடம் எடுத்துச் சென்று அதன் சுடரைப் பரப்பிவரும் நல்லுள்ளங் கொண்ட முஸ்லிம் லீக் முன்னோடிகள் என்று எல்லோரும் பங்கேற்ற அந்த ஆலோசனை கூட்டத்தில் பல அரிய கருத்துரைகள் வெளிவந்தன.

'மணிச்சுடர்' நாளேடு – பல வண்ணத்தில் வரவேண்டும்; செய்திகளையும் – படங்களையும் அதில் தர வேண்டும் என்றனர் சிலர்.

நான்கு பக்க ஏடாக இருப்பதால், வாங்குவோர் தயங்குகிறார்கள்; பக்கத்தைக் குறைந்தது ஆறு ஆக்குவது நல்லது. அதோடு, வெள்ளிச்சுடர் ஒன்றும் வாரந்தோறும் வெளிவர வேண்டும். அதில் சிறுகதை, கவிதை, இலக்கியப் படைப்பு, மகளிர்

## கே.எம்.கே.

பகுதி, மாணவ – மாணவியர்க்குரிய பகுதி, மருத்துவப் பகுதி... இப்படிப் பல தலைப்புகளிலும் படைப்புகள் இடம் பெறுதல் நல்லது என்றனர்.

'மணிச்சுடர்' ரயில் மூலம் அனுப்பப்படுவதை வரவேற்றவர்கள், கூரியர் மூலம் செல்வதால் காலதாமதம் ஏற்படுகிறது என்றும் கூறினர். இன்றையப் பத்திரிகை அடுத்த நாளிலேயே வாசகர்களிடம் கிடைக்கும் வழி காண வேண்டும் என்றார்கள்.

நிருபர்கள் கருத்துச் சொல்லு ம்போது, மாவட்ட அளவிலான நிருபர்களாகவும், முக்கிய நகர அளவிலான நிருபர்களாகவும் இருக்கிறோம்; ஆனால், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாவட்ட, நகர நிர்வாகிகள் கூட்டும் பத்திரிகையாளர் கூட்டங்களுக்கு 'மணிச்சுடர்' நிருபர்களுக்கு தகவல் தருவதற்கு மறந்து விடுகிறார்கள். நிருபர்களுக்குத் தெரியாமல், செய்திகளை நேரே அனுப்பி விடுகிறார்கள். அதை மணிச்சுடரும் பிரசுரித்து விடுகிறது. இதனால், 'மணிச்சுடர்' நிருபரின் அவசியம் அவர்களுக்குப் புரிவதில்லை என்னும் குற்றச்சாட்டைச்சொல்லி, ஒவ்வொரு மாவட்ட முஸ்லிம் லீக் மற்றும் நகர, பிரைமரி லீகுகள் மணிச்சுடருக்கு அந்தந்த ஊரில் உள்ள நிருபர்கள் மூலமாகச் செய்தி அனுப்பப்பட வேண்டும் என்பதையும், 'மணிச்சுடர்' நிருபர் மூலம் அனுப்பப்படாத செய்திகளை பிரசுரிப்பதில்லை என்பதையும் தெளிவுபடுத்தினால் நல்ல பயன் ஏற்படும் என்றும் கருத்துத் தெரிவித்தனர்.

முகவராக உள்ளவர்களுடன் இணைந்து நிருபர்களாக உள்ளவர்களும் பத்திரிகை விநியோகத்துக்கும் விளம்பரங்கள் சேகரிப்பதற்கும் எல்லாவித முயற்சிகளையும் எடுப்பது என்றும் பேசப்பட்டிருக்கிறது.

'மணிச்சுடர்' வெள்ளி விழா – காலச்சுவடு மலர் என்பதோடு ரமளான் மலரும் இணைந்துதான் வருகிறது என்பதை வாசகர்களுக்கும் – விளம்பரதாரர்களுக்கும் தெரிவிக்கும்படியும் ஆலோசனை தரப்பட்டிருக்கிறது.

'மணிச்சுடர்' மற்றும் மலர் வெளியிடுவதற்குரிய ஆலோசனைகள் பலவும் ஏற்கப்பட்டு, அவற்றை ஒவ்வொன்றாக

(4–ம் பக்கம் பார்க்க)



இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் இ.அஹமது, கேரள மாநிலத் தலைவர் பாணக்காடு செய்யது ஹைதர் அலி ஷிஹாப் தங்ஙள், கேரள மாநில பொதுச் செயலாளர் இ.டி. முஹம்மது பஷீர் எம்.பி. ஆகியோர் ஜனாபதிபதி தலைவர் பதவிக்கான ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் வேட்பாளர் பிரணாப் முகர்ஜியை டெல்லியில் நேரில் சந்தித்து வாழ்த்தும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆதரவையும் தெரிவித்தனர். இந்திய யூனியன் முஸ்லிம் லீகின் தேசிய பொதுச் செயலாளர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் வாழ்த்துச் செய்தியை தந்தி மூலம் அனுப்பியிருந்தார்.

## இந்திய குடியரசு தலைவர் தேர்தல்:

# பிரணாப் முகர்ஜி 28-ம் தேதி மனுத்தாக்கல்

## மன்மோகன் சிங், சோனியா காந்தி, கலைஞர், இ.அஹமது உள்ளிட்ட தலைவர்கள் வேட்புமனுவை முன்மொழிகின்றனர்

புதுடெல்லி, ஜூன்.20:

இந்திய குடியரசு தலைவர் தேர்தல் வருகிற ஜூலை 19–ந் தேதி நடைபெறுகிறது. இதற்கான மனுதாக்கல் கடந்த 16–ந் தேதி தொடங்கியது. மனுதாக்கல் செய்ய வருகிற 30–ந் தேதி கடைசி நாளாகும்.

ஐக்கிய முற்போக்கு கூட்டணி வேட்பாளரான பிரணாப் முகர்ஜி வருகிற 28–ந் தேதி மனுதாக்கல் செய்கிறார். அவரது வேட்பு மனுவில் 50 பேர் முன்மொழிந்தும், வழிமொழிந்தும் கையெழுத்திடுகிறார்கள்.

4 பிரதிகள் கொண்ட வேட்பு மனுக்கள் தயாராகி வருகின்றன. பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, தி.மு.க. தலைவர் கலைஞர், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் இ.அஹமது உள்ளிட்டோர் பிராணாப் முகர்ஜியை வேட்பாளராக முன்மொழிந்து வேட்பு மனுவில் கையெழுத்திட்டுள்ளனர்.

இதைத் தொடர்ந்து மற்ற கூட்டணி தலைவர்கள், ஆதரவு கட்சியைச் சேர்ந்தோர் கையெழுத்திட்டு வருகிறார்கள். அவரது வேட்பு மனுபிரதிகள் நாடாளுமன்ற வளாகத்தில் வைக்கப்பட்டுள்ளன. இதில் காங்கிரஸ் கூட்டணி கட்சி எம்.பி.க்கள், மற்றும் ஆதரவு கட்சி எம்.பி.க்கள் முன்மொழிந்தும், வழிமொழிந்தும் கையெழுத்திடும்படி பிரணாப் தேர்தல் பிரசார குழு கேட்டுக் கொண்டுள்ளது. வேட்புமனு தாக்கல் செய்த பின்பு பிரணாப் முகர்ஜி நிதியமைச்சர் பதவியை ராஜினாமா செய்வார் என்று தெரிகிறது. பிரணாப் முகர்ஜிக்கு 23 கட்சிகள் ஆதரவு அறிவித் துள்ளதாக பிரதமர் அலுவலக அமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார்.



முதல்வர் ஜெயலலிதா இன்று தலைமைச் செயலகத்தில், சுற்றுலாத்துறையின் மூலம் வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் ரூ. 3 கோடியே 25 லட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ள பணிகளை திறந்து வைத்தார்.

## தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆலோசனைக் கூட்டம் இன்றும் ஒத்திவைப்பு

**புதுடெல்லி, ஜூன்.20: குடியரசுத் தலைவர் தேர்தலில் என்ன நிலை எடுப்பது என்று தெரியாமல் பாரதீய ஜனதா கட்சி திணறி வருகிறது. இன்று ஒரு நிலைப்பாட்டை எடுக்கலாம் என்று இருந்த தேசிய ஜனநாயகக் கூட்டணி தனது ஆலோசனைக் கூட்டத்தை திடீரென ஒத்தி போட்டு விட்டது.**

இந்திய குடியரசு தலைவர் தேர்தலில் என்ன முடிவெடுப்பது என ஒருமித்த கருத்தை எட்டுவது தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளிடையே பெரும் குழப்பமாகிவிட்டது. பிரணாப் முகர்ஜியை ஆதரிக்க வேண்டும், இல்லா விட்டால் சங்மாவை ஆதரிக்க வேண்டும். அதுவும் இல்லா விட்டால் ஒதுங்கி இருக்க வேண்டும். இந்த மூன்றே மூன்று வழிகள் மட்டுமே பாஜக மற்றும் தேசிய ஜனநாய கக் கூட்டணி கட்சிகள் முன்பு உள்ளன.

இந்த மூன்றில் என்ன முடிவு எடுப்பது என்பதில் கூட்டணி கட்சித் தலைவர்களிடையே கருத்து வேறுபாடு நிலவி வருகிறது.

### உயர்மட்ட குழு கூட்டம்:

பிரணாப் முகர்ஜியை காங்கிரஸ் கட்சியும், அப்துல் கலாமை மம்தாவும் அறிவித்த பின்னர் பா.ஜ.,வின் உயர்மட்டக் குழு கூட்டம், நிதின் கட்காரி வீட்டில் நடைபெற்றது.

இரவு 9 மணிக்கு துவங்கிய அந்தக் கூட்டம், நள்ளிரவு 12 மணி வரை நடந்தும் கூட, எந்தவொரு முடிவும் எடுக்கப்படவில்லை. காங்கிரஸ் எதிர்ப்பை எல்லாம், ஒருமுகப் படுத்த வேண்டிய நிலையில், இப்படி கோட்டை விடுகிறோமே என்ற கவலையை, முக்கிய தலைவர்கள் பலரும் பகிர்ந்து கொண்டனர்.

இந்த ஜனாதிபதி தேர்தலில், இதை செய்யத் தவறினால், அடுத்த பொதுத் தேர்தலுக்கு முன்பாக, மூன்றாவது அணி உருவாக வாய்ப்பு ஏற்பட்டுவிடும்; காங்கிரசின் பிரதான எதிரி, பா.ஜ., தான் என்ற தகுதியை இழந்து, வேறு சில கட்சிகள் ஒன்று சேர்ந்து, எதிர்க்கும் சூழ்நிலை உருவா கும் என்ற அச்சத்தை பா.ஜ.க., தலைவர்கள் பகிர்ந்து கொண்டனர்.

மேலும், கலாமை ஆதரிக்கலாம் என சிலரும், பிரணாப்பை ஆதரிக்கலாம் என சரத் யாதவ் உள்ளிட்ட சிலரும் மாறி மாறிப் பேசியதால் முடிவு எடுக்காத நிலை ஏற்பட்டது.

### இன்றும் கூட்டம் ஒத்திவைப்பு

இந்த நிலையில் இன்று கூடி நிலைப்பாட்டை இறுதி செய்ய தேசிய ஜனநாயகக் கூட்டணி திட்டமிட்டிருந்தது. ஆனால் இன்று கூட்டமே நடக்கவில்லை, தள்ளிப் போட்டு விட்டனர்.

இந்த விவகாரம் குறித்து மூத்த தலைவர் அத்வானி கருத்து தெரிவிக்கையில், குடியரசுத் தலைவர் தேர்தலில் நிச்சயம் போட்டி இருக்க வேண்டும். அதுதான் ஜனநாயகத்திற்கு நல்லது. ஆனால் யாரை ஆதரிப்பது என்பது குறித்து எங்களால் இன்னும் முடிவு செய்ய முடிய வில்லை. எதிர்க் கட்சிகளின் வலிமையை நாங்கள் நிச்சயம் நிரூபிப்போம் என்றார்.

பிரணாப் முகர்ஜிக்கு கடும் போட்டி தர வேண்டும் என்று பாஜக நினைக்கிறது. ஆனால் வலுவான வேட்பாளர் இல்லையே என்பதே அதன் குழப்பத்திற்குக் காரணமாக சொல்லப்படுகிறது.

அதேசமயம், 2014 லோக்சபா தேர்தலையும் அது மனதில் வைத்து எந்த முடிவையும் எடுத்தாக வேண்டிய நிலையில் உள்ளது. அதாவது சங்மாவை ஆதரித்தால், அதிமுக, பிஜூ பட்நாயக் உள்ளிட்ட கட்சிகளை கூட்டணியில் சேர்க்கும் வாய்ப்பு அதற்குக் கிடைக்கும். சங்மாவை விட்டு விட்டு வேறு வேட்பாளரை நிறுத்த தீர்மானித்தால் இந்தக் கட்சிகள் கிடைக்காமல் போகலாம். அதேசமயம், ஐக்கிய ஜனதாதளம் கட்சி பிரணாப் முகர்ஜிக்கு ஆதரவில் உறுதியாக இருக்கிறது.

ஏற்கனவே சிவ சேனா கட்சி பிரணாப்புக்கு ஆதரவு தெரிவித்து விட்டது. பா.ஜ.க.விலும், எடியூரப்பா, மேனகா காந்தி உள்ளிட்ட தலைவர்கள் பிரணாப்புக்கு ஆதரவு தெரிவித்து அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளனர். எனவே இந்தக் குடியரசுத் தலைவர் தேர்தலால் பாஜக உடைந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய அவசரத்திலும் அந்தக் கட்சி உள்ளது.

குடியரசு தலைவர் தேர்தலில் தற்போது மம்தா பானர்ஜி தனிமைப்படுத்தப்பட்டுள்ளதைப் போல், பா.ஜ.க.,வும் தனி மைப்படுத்தப்பட்டுள்ளது.

### பா.ஜ.க.,வுக்கு எதிராக தேசிய ஜனநாயக கூட்டணி

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உள்ள கட்சிகள் அனைத்துமே பாஜகவுக்கு எதிரான நிலைப்பாட்டுடன் இருப்பதாகவும் தகவல்கள் கூறுகின்றன. அவர்கள் அனைவருமே பிரணாப்புக்கு ஆதரவாக பேசி வருகின்றனர். ஆனால் பா.ஜ.க.,வுக்கு பிரணாப்பை ஆதரிப்பதில் தயக்கம் உள்ளது. இதுதான் குழப்பத்திற்குக் காரணம்.

ஒரு வேளை அப்துல் கலாம் போட்டியிட சம்மதித்திருந்தால் நிலைமை வேறாக இருந்திருக்கும், பிரணாப் முகர் ஜிக்கு கடும் போட்டியைக் கொடுத்திருக்கலாம், தங்களுக்கும் ஆதாயம் கிடைத்திருக்கும், கூடவே மம்தாவின் புதிய கூட்டணியும் கிடைத்திருக்கும் என்று ஏமாற்றத்துடன் கூறுகிறார்கள் பாஜகவினர்.

தற்போதைய நிலையில் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் முடிவு என்பது, இடதுசாரிகள் எடுக்கப் போகும் முடிவைப் பொறுத்தே உள்ளது.

முதலில் காங்கிரஸ் தனது வேட்பாளரை அறிவிக்கட்டும் என்று பாஜக கூறி வந்தது. பிறகு மம்தா பானர்ஜியின் அணுகுமுறைக்கு என்ன ஆதரவு இருக்கிறது என்று பார்த்தார்கள். இப்போது இடதுசாரிகள் என்ன நிலை எடுக்கிறார்கள் என்பதைப் பொறுத்திருந்து பார்க்கப் போவதாக பாஜக தரப்பில் கூறுகிறார்கள்.

## மாமன்ற அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் திருந்தாவிட்டால்

# சென்னை மாநகராட்சியை கலைத்து விடுவேன்: ஜெயலலிதா எச்சரிக்கை

சென்னை, ஜூன்.20:

சென்னை மாநகராட்சியில் தவறு செய்யும் மாமன்ற அதிமுக உறுப்பினர்கள் திருந்தா விட்டால் மாமன்றத்தைக் கலைத்து விடுவேன் என முதல்வர் ஜெயலலிதா எச்சரித்துள்ளார்.

சென்னை மாநகராட்சி மாமன்ற அதிமுக உறுப்பினர்களில் சிலர் மீது ஏராளமான முறைகேடு புகார்கள் வந்துள்ளதாகவும், அவர்கள் மாநகராட்சி வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றுவதில் முறைகேடுகளில் ஈடுபட்டு வருவதாகவும் முதல்வர் ஜெயலலிதாவுக்கு தகவல் கிடைத்துள்ளதாகக் கூறப்பட்டது.

எனவே, ஆட்சிக்கு கெட்ட பெயரை ஏற்படுத்தும் மாமன்ற உறுப்பினர்களைக் கண்டிக்கவும், அவர்களுக்கு தக்க 'அறிவுரை' வழங்கவும் உறுப்பினர்களின் கூட்டத்தை கூட்ட முதல்வர் முடிவு செய்தார்.

அதன்படி, தியாகராயநகரில் உள்ள மாநகராட்சி மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை சுமார் அரை மணி நேரம் நடைபெற்ற கூட்டத்தில் முதல்வர் ஜெயலலிதா கலந்து கொண்டு முறைகேடுகளில் ஈடுபட்டு வரும் மாமன்ற உறுப்பினர்களை கண்டித்ததாகவும், அவர்களுக்கு கடுமையான முறையில் அறிவுரைகளையும், எச்சரிக்கைகளையும் அளித்துள்ளதாகவும் கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்களில் சிலர் பின்னர் தெரிவித்தனர். பெயரை வெளியிட வேண்டாம் என்ற வேண்டுகோளுடன் அவர்கள் மேலும் கூறியதாவது:

அதிமுக உறுப்பினர்களில் சிலர் முறைகேடுகளில் ஈடுபட்டு வருவது குறித்து அனைத்து விவரங்களையும் முதல்வர் சேகரித்து வைத்துள்ளார். உறுப்பினர்கள் எவரும் தவறு செய்யக் கூடாது என முதல்வர் அறிவுரை கூறினார். மேலும், புகார்களுக்கு இடம் கொடுக்காமல் மக்கள் பணியாற்ற வேண்டும் என்றும் தெரிவித்தார்.

மக்களுக்கு சேவை செய்யவே நமக்கு வாக்களித்துள்ளனர். உறுப்பினர்கள் முறைகேடுகளில் ஈடுபட்டால் அது ஆட்சிக்கு கெட்ட பெயரை ஏற்படுத்தும் என்றும் முதல்வர் தெரிவித்தார்.

மக்களின் தேவைகள் மற்றும் பிரச்னைகளை உறுப் பினர்கள் அறிந்து அவற்றை அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு சென்று தீர்வு காண வேண்டும்.

அதை விடுத்து அதிகாரிகளி டம் பேரம் பேசி காரியம் சாதிக்க நினைக்க கூடாது. இதனால் சில அதிகாரிகள் நேரடியாகவே முறைகேடுகளில் ஈடுபடத் தொடங்கி விட்டார் கள்.

இது பொதுமக்கள் மத்தியில் ஆட்சிக்கு கெட்ட பெயரை ஏற்படுத்தும். உறுப்பினர்கள் இதுபோன்ற செயல்களில் இனிமேல் ஈடுபடக் கூடாது. அவ்வாறு ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்தார்.

தவறு செய்யும் மாமன்ற உறுப்பினர்கள் ஒரு மாத காலத்துக்குள் தங்களை திருத்திக் கொள்ள வேண்டும். இனிமே லும் தொடர்ந்து உறுப்பினர்கள் முறைகேடுகளில் ஈடுபடுவ தாக தகவல் வந்தால் மாநகராட்சியைக் கலைத்து விடுவேன் என்றும் முதல்வர் எச்சரித்துள்ளார் என்றனர்.

Trusted Name Since 1981 in
Travel, Recruitment, Haj, Umra & Saudi Visa Service
HALEEMA ENTERPRISES
Approved by Ministry of Overseas Indian Affairs
Regd No. B-0105/MUM/PER/1000+/2½/5244/99
Shop No. 27, 1st Floor, ALSA MALL
No. 4, Montieth Road, Egmore, Chennai - 600 008.
E-mail : haleemaent.maa@gmail.com
Tel : 044 - 3054 8655 / 3054 8455 Mobile : 98402 28379
Head Office :
No.5, 1st Floor, 94, Kambekar Street, MUMBAI - 400 003.
Tel : 022 - 4083 4777 (15 Lines) 2345 5162
Fax : 022 - 4083 4700 / 2345 5470 E-mail : info@haleema.com
Branches : Calicut : 0495 - 2725659 / 99460 49720 / 3046334
Trivandrum : 0471 - 2334538 / 98951 73255 Bangalore : 97243 33786
Hyderabad : 9177521717 / 040 - 66565786
(و كالة) حليمة انتر برايزيز
معترف بوزارة العمل با لحكومة الهندية
Website : www.haleema.com

BIS 916 HALLMARKED JEWELLERY
BIS HALLMARK
Valet Car Parking
T.NAGAR LKS ®
Since 1925
T.Nagar Ph: (2434) 1111 / 5555
Anna Nagar Ph: (2620) 4444 / 5555

C M Y K

# அல் குர்ஆன் அமுதமொழி

**5 அல்மாயிதா - மரவைகள் 112**

பிரிவுகள் - 16 மதனீ வசனங்கள் -120
சொற்கள் - 2842 எழுத்துக்கள்-13464

(3-ஆம் வசனத்தைத் தவிர, மற்றவை)

**அளவற்ற அருளாளனும்
நிகரற்ற அன்புடையோனுமாகிய
அல்லாஹ்வின் திருநாமத்தால்....**

*15. வேதத்தையுடையவர்களே! உங்களிடம் மெய்யாகவே நம்முடைய ஒரு தூதர் வந்திருக்கின்றார். வேதத்தில், நீங்கள் மறைத்துக்கொண்ட பல விஷயங்களை, அவர் உங்களுக்குத் தெளிவாக எடுத்துக் காண்பிக்கிறார்; மற்றும் (வேதத்தைப் பற்றி நீங்கள் கொண்டுள்ள தவறான கருத்துக்கள்) பலவற்றைப் போக்கி விடுகின்றார். நிச்சயமாக அல்லாஹ்விடமிருந்து, பேரொளியும் தெளிவுமுள்ள ஒரு வேதம் (இப்போது) உங்களிடம் வந்திருக்கின்றது.*

*16. (உங்களில்) எவர்கள், அல்லாஹ்வின் திருப் பொருத்தத்தைப் பின்பற்றுகிறார்களோ அவர்களை, அதன் மூலமாக அல்லாஹ் சமாதானத்திற்குரிய வழியில் செலுத்துகின்றான். அன்றி, (அந்தகார) இருள்களிலிருந்தும் அவர்களை வெளிப்படுத்தித் தன் அருளைக் கொண்டு பிரகாசத்தின் பக்கம் கொண்டு விடுகிறான். தவிர, அவர்களை நேரான வழியில் செல்லும்படியும் செய்கின்றான்.*

*17. எவர்கள், மர்யமுடைய மகன் மஸீஹை, அல்லாஹ்தான் என்று கூறுகின்றனரோ அவர்கள், நிச்சயமாக (உண்மையை) நிராகரிப்பவர்களாகவே இருக்கின்றனர். (ஆகவே, நபியே!) நீர் கூறும்: "மர்யமுடைய மகன் மஸீஹையும், அவருடைய தாயையும், பூமியிலுள்ள (மற்ற) யாவரையும், அல்லாஹ் அழித்துவிடக் கருதினால், (அதனைத் தடுக்க) எவன்தான் சிறிதேனும் சக்தி பெறுவான்? (ஏனென்றால்,) வானங்கள் பூமியுடையவையும், இவைகளுக்கு மத்தியில் உள்ளவைகளுடையவும் ஆட்சி, அல்லாஹ்வுக் குரியதே! அவன் விரும்பியதைப் படைக்கின்றான். அல்லாஹ் யாவற்றின் மீதும் மிக்க ஆற்றலுடையோனாக இருக்கின்றான்.*

*18. யூதர்களும் கிறிஸ்தவர்களும், "நாங்கள் அல்லாஹ்வுடைய குமாரர்களாகவும், அவனால் நேசிக்கப்பட்டவர்களாகவும் இருக்கின்றோம்'' என்று கூறுகின்றனர். (ஆகவே, நபியே! அவர்களை நோக்கி) நீர் கூறும்: "அவ்வாறாயின், உங்கள் குற்றங்களுக்காக, அவன் உங்களை ஏன் (அடிக்கடி தண்டிக்கும் முறையில்) துன்புறுத்துகிறான்? (உண்மை) அவ்வாறன்று. நீங்களும், அவன் படைத்த (மற்ற) மனிதர்கள் (போன்று) தாம். (நீங்கள் அவனுக்குப் பிறந்த குமாரர்களல்ல. ஆகவே, உங்களிலும்) அவன் விரும்பியவர்களை மன்னிக்கின்றான்; அவன் நாடியவர்களை வேதனை செய்கிறான்.'' (ஏனென்றால்,) வானங்கள் பூமியுடையவும், இவைகளுக்கு மத்தியிலுள்ள யாவற்றினுடையவும் ஆட்சி, அல்லாஹ்வுக்குரியதே! அவனளவில்தான் (யாவரும்) செல்ல வேண்டியதாயிருக்கின்றது.*

**(அத் : 5 - வசனம் : 15-18)**

**மொழிபெயர்ப்பு : அல்லாமா அப்துல் ஹமீது பாகவி (ரஹ்)**

# அண்ணல் நபி (ஸல்)கன்னல் மொழி

நீங்கள் நோன்பு இருந்தாலும், தொழுகையை தவறாது நிறைவேற்றினாலும் உண்மையான ஒழுக்கம் இல்லாதவரை நீங்கள் எவ்வித நன்மையையும் அடைய முடியாது.

**அறிவிப்பாளர் : இப்னு அப்பாஸ் (ரலி)**

# தொழுகை நேரம்

**ஜூன் 18 முதல் 23 வரை (சென்னைக்கு மட்டும்)**

| | |
|---|---|
| பஜ்ரு- 4-19 | மஃரிப் - 6-42 |
| ளுஹர்- 12-25 | இஷா 8-01 (ஷாபி) |
| அஸர் - 3-41 (ஷாபி) | '' 8-10 (ஹனபி) |
| '' 4-46 (ஹனபி) | |

**சூரிய உதயம் : 05-50 அஸ்தமனம் : 06-40**

# சிந்தனைக் களஞ்சியம்

நாயகம் (ஸல்) அவர்களை ஆரம்பத்தில் பணக்காரர்களும், செல்வாக்கு மிக்கவர்களும் மூர்க்கமாக எதிர்த்தனர். ஆனால், இறுதியில் அரேபியா முழுமைக்கும் மட்டும் அல்லாமல் உலகத்திற்கே அவர்கள் லௌகீகத்திற்கும், ஆன்மீகத்திற்கும் சேர்ந்து ஏகத் தலைவர் ஆனார்கள்.

எனவே, பணம் இருந்தால் மட்டும் வெற்றி கிட்டிவிடாது. வெற்றிக்கு அடிப்படை தூய்மை— உறுதி.

**—காயிதெ மில்லத் (ரஹ்)**



கடையநல்லூரில் நடைபெற்ற நெல்லை மாவட்ட ஜமாஅத்துல் உலமா சபை பொதுக்குழுக் கூட்டத்தில் மாவட்ட செயலாளர் எம்.எச்.சம்சுதீன் ஹஜ்ரத் பேசினார். அருகில் நெல்லை மேற்கு மாவட்ட அரசு டவுண் காஜி ஏ.ஒய்.முஹ்யித்தீன் ஹஜ்ரத், மேலப்பாளையம் பி.ஏ. ஹாஜா முயீனுத்தீன் ஹஜ்ரத், தென்காசி எம்.எஸ்.எஸ்.மஹ்மூது ஆலிம் உள்ளிட்டோர்.

# அரபிக் கல்லூரி மாணவர்களுக்கும் இலவச லேப்டாப் வழங்க வேண்டும்

## தமிழக அரசுக்கு ஜமாஅத்துல் உலமா சபை கோரிக்கை

கடையநல்லூர், ஜூன்.20—

நெல்லை மாவட்ட ஜமாஅத்துல் உலமா சபை பொதுக் குழு கூட்டம் கடையநல்லூர் பெரிய தெரு ஊரணி பள்ளி வாசலில் மேலப்பாளையம் உஸ்மானியா அரபிக் கல்லூரி பேராசிரியர் ஹாஜா முயினுத்தீன் ஹஜ்ரத் தலைமையில் நடைபெற்றது.

மாவட்டப் பொருளாளர் ஏ.ஒய். முஹ்யித்தீன் ஹஜ்ரத் முன்னிலை வகித்தார். செய்யது அஹமது ஆலிம் கிராஅத் ஓதினார். மாவட்டச் செயலாளர் ஷம்சுத்தீன் ஹஜ்ரத் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் செங்கோட்டை கமருதீன் ஆலிம், புளியங்குடி கலீல் ரஹ்மான் ஆலிம், தென்காசி மஹ்மூது ஆலிம், மேலப்பாளையம் அலி உசேன் பாக்கவி, சங்கரன் கோவில் சாகுல் ஹமீது ஆலிம், வடகரை சாகுல் ஹமீது ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

முஸ்லிம் பகுதிகளில் உள்ள துவக்கப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் ஒரு பகுதி தீனியாத் பயிற்சி நடத்துவதற்கு அனுமதி பெற்று அந்தப் பகுதிகளில் உள்ள இமாம்கள் தீனியாத் பயிற்சி நடத்திட வேண்டுமாய் இப் பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

சமுதாயம் சம்பந்தமாக எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் பெறுகின்ற இமாம்கள் ஜும்ஆவில் வாசித்து ஜமாஅத்தார்களுக்கு தெரியப்படுத்த வேண்டுகிறது.

அரபிக் கல்லூரிகளில் படிக்கின்ற பட்டம் பெறும் மாணவர்களுக்கும் இலவச லேப்டாப் வழங்கவேண்டுமாய் தமிழக அரசை கேட்டுக் கொள்கிறது.

பள்ளிவாசல்களில் பணியாற்றுகின்ற இமாம்களுக்கு தமிழக அரசு அறிவித்துள்ள பசுமை வீடு திட்டத்தின் கீழ் இலவச வீட்டு மனை பட்டா வழங்க வேண்டுமாய் தமிழக அரசை இப்பொதுக் குழு வேண்டுகிறது.

மேலப்பாளையம் சதக்கத்துல்லா ஆலிம், திருநெல்வேலி முஹம்மது இப்ராஹீம் ஆலிம், புளியங்குடி தி. மீராசா ஆலிம், அருளாச்சி பி அப்துல் ரஹீம், கடையநல்லூர் அதாவுல்லாஹ் ஆலிம், அம்பை பீர் முஹம்மது ஆலிம், பொட்டல்புதூர் அன்பு ஹாஜா முகைதீன் ஆலிம், நெல்லை பேட்டை ஜமால் ஆலிம் உட்பட ஏராளமான உலமாப் பெருமக்கள் பங்கேற்றனர்.

கடையநல்லூர் நகர ஜமாஅத்துல் உலமா சபை செயலாளர் கலீல் அஹமது ஆலிம் நன்றி கூறினார்.

# 'கைதியின் மறுபக்கம், குறும்பட முன்னோட்டம் வெளியீட்டு விழா

தேனி, ஜூன்.20—

தேனி மாவட்டம் பெரியகுளத்தில் 'சாரல் குழுவினர்' குறும்பட நிறுவனத்தாரின் 'கைதியின் மறுமக்கம்' குறும்பட வெளியீட்டு விழா நடைபெற்றது.

விழாவில் சிறப்பு விருந்தினராக விழுப்புரம் மாவட்ட இந்திய யூனியன் முஸ்லிம் லீக் செயலாளர் எஸ்.எம். அமீர் அப்பாஸை நிறுவனராக கொண்டு வெளிவரும் 'எழுச்சி முரசு' மாதமிருமுறை இதழின் ஆசிரியர் எழுத்தாளர் பிரியம் தாரிக் கலந்து கொண்டு குறும்ப சி.டி.யை வெளியிட, தேனி மாவட்ட இந்திய யூனியன் முஸ்லிம் லீக் பொருளாளர் ஆர்.எம். அப்துல் நஸீர் ஆவணப்பட இயகுநர் ஜெயகுமார் பெற்றுக் கொண்டனர்.



பெரியகுளம் அருள் தியேட்டரில் நடைபெற்ற 'கைதியின் மறுபக்கம்' குறும்பட சி.டி. வெளியீட்டு விழாவில் பெரியசாமி, ஆர்.எம். அப்துல் நசீர், 'எழுச்சி முரசு' ஆசிரியர் பிரியம் தாரிக், ஜெயக்குமார், மது, திருப்பதி ஆகியோர்.

விழாவில் உதவி இயக்குநர் அப்பாஸ், கல்லூரி மாணவரும் 'எழுச்சி முரசு' இதழின் மதுரை வட்டார செய்தியாளருமான ஹக்கீம், திரைப்பட நடிகர் எஸ்.பி. சாமி, குறும்பட இயக்குநர் வழக்கறிஞர் மது காமராஜ், ஆசிரியர் முத்துக்கிருஷ்ணன், எடிட்டர் லெனின் சேகு, அக்ரி கார்த்திக், செல்வராஜ் வினோபா தனலட்சுமி, சோலையப்பன், திருப்பதி, கதிரேசன், அசோக் குமார், சிவா, செல்வம், முத்து மணி, அகிலன், துரைபாண்டி, செந்தில்குமார் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

நிகழ்ச்சியை சேது தொகுத்து வழங்க 'கைதியின் மறுமக்கம் குறும்பட இயக்குநர் கதிரேசன் நன்றி கூறினார்.

## சென்னை திருவல்லிக்கேணி—கிருஷ்ணாம்பேட்டையில்

# உலமா-யே- நூரிய்யா சார்பில் 2012ம் ஆண்டு ஆலிம் பட்டம் பெற்ற உலமாக்களுக்கு வரவேற்பு விழா

சென்னை, ஜூன்.20:

சென்னை திருவல்லிக்கேணி கிருஷ்ணாம்பேட்டை முஹல்லாவில் உலமா—யே— நூரிய்யா சார்பில் இம்முஹல்லாவைச் சேர்ந்த 2012ம் ஆண்டு பட்டம் பெறும் ஆலிம்களுக்கு வரவேற்பு விழா ஃபக்கீர் லெப்பை ஜமாஅத் மஸ்ஜிதில் நடைபெற்றது.

பக்கீர் லெப்பை ஜமாஅத் மஸ்ஜித் நிர்வாகக் குழு ஆலோசகர் எஸ்.எம். கனி சிஷ்தி நூரி தலைமைதாங்கினார், பள்ளிவாசல் தலைவர் தமீம் அன்சாரி ஆமிரி, செயலாளர் தாஜ் எம்.எஸ்.காஜா, பொருளாளர் அப்துல் காதர், ஆகியோர் முன்னிலை வகித்த னர்.

மௌலவி முஹம்மது இத்ரீஸ் பிலாலி கிராஅத் ஓதினார். மௌலவி முஹம்மது அமீன் பிலாலி, இசைக்குயில் அபூபக் கர் ஆகியோர் இஸ்லாமிய கீதம் இசைத்தனர். மௌலவி ஷாஹுல் ஹமீது பையாஜி வரவேற்புரையாற்றினார்.

சென்னை மாவட்ட ஜமாஅத்துல் உலமா சபை செயலாளரும், சென்னை பல்கலைக் கழகத்தின் அரபித்துறை பேராசிரியருமான மௌலானா வி.எஸ். அன்வர் பாதுஷா உலவி ஹஜ்ரத் வாழ்த்துரை வங்கினார்.

சென்னை நெமிலி பிலாலிய்யா அரபிக் கல்லூரி நிறுவனர் மௌலானா பிலாலி ஷாஹ் ஜௌஹரி ஹஜ்ரத் சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் சுங்குவாச் சத்திரம் ஆமிர் கலீமீ அரபிக் கல்லூரி முதல்வர் மௌலானா முஹம்மது உபைதுர் ரஹ்மான் ஆமிரி சிராஜி ஹஜ்ரத், கலீபா மௌலானா முஹம்மது யூனுஸ் பிலாலி, மௌலானா நிஸார் அஹ்மது பாஜில் ஜமாலி, பள்ளிவாசல் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் மற்றும் மௌலவி காஜா முயீனுத்தீன் ஆமிரி ஜமாலி, மௌலவி மு.அ. ரஹ்மத்துல்லாஹ் ஆமிரி ஜமாலி, மௌலவி செய்யது பிலால் பையாஜி, மௌலவி ஜாபர் சாதிக் ஜமாலி, மௌலவி அப்துஸ் ஸத்தார் காஷிபி, மௌலவி முஹம்மது ஸலாமுல்லாஹ் மன்பஈ, மௌலவி அபு தாஹிர் பையாஜி, மௌலவி முஹம்மது ஆஷிக் பிலாலி, மௌலவி முஹம்மது ரசூல் மைதீன் மன்பஈ,


மௌலவி ஷேக் மைதீன் பிலாலி, மௌலவி பத்ருத்தீன் மதீனி, மௌலவி முஹம்மது அமீன் பிலாலி, மௌலவி அப்துர் ரஹ்மான் பிலாலி, மௌலவி முஹம்மது இத்ரீஸ் பிலாலி, மௌலவி முஹம்மது ரசூல் மைதீன் மஆலி, மௌலவி முஹம்மது இஸ்மாயில் பிலாலி உள்ளிட்ட ஏராளமான உலமாக்களும், மஹல்லா ஜமாஅத்தினரும் கலந்து கொண்டனர்.

# பாகிஸ்தானில் பிரதமர் கிலானி பதவி பறிப்பு

## நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் உச்சநீதிமன்றம் அதிரடி

இஸ்லாமாபாத், ஜூன்.20:

பாகிஸ்தான் பிரதமர் யூசப் ரஸா கிலானியை தகுதி நீக்கம் செய்து அந்த நாட்டு உச்ச நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது. நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் தண்டிக்கப்பட்ட கிலானி, கடந்த ஏப்ரல் மாதம் 26—ம் தேதி முதலே பிரதமர் பதவியில் நீடிக்க தகுதியற்றவர் என்றும் உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது. இதன் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை கிலானி இழக்கிறார்.



இந்த தீர்ப்பு கிலானிக்கு மட்டுமல்ல; அவர் சார்ந்துள்ள பாகிஸ்தான் மக்கள் கட்சிக்கு அதிர்ச்சியை அளித்துள்ளது. நீதிமன்ற தீர்ப்பை அடுத்து கிலானிக்கு பதிலாக வேறு ஒருவரை பிரதமராக்கவும் அக்கட்சி முடிவு செய்துள்ளது.

பாகிஸ்தான் மக்கள் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் இன்று நடை பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதைய அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள சௌத்ரி அகமது முக்தார், மக்தூம் ஷஹாபுதீன், குர்ஷீத் ஷா ஆகிய மூவரில் ஒருவர் புதிய பிரதமராக தேர்ந்தெடுக்கப்படலாம் என்று தெரிகிறது.

பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம் அளித்துள்ள பரபரப்பான இந்தத் தீர்ப்பை அடுத்து அதிபர் ஆஸிப் அலி ஜர்தாரி, தனது இரண்டு நாள் ரஷியா பயணத்தை ரத்துச் செய்துள்ளார்.

அதிபர் ஆஸிப் அலி ஜர்தாரி மீது பல கோடி ரூபாய் ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இது குறித்து அவரிடம் விசாரணை நடத்த வேண்டும். எனவே இந்த வழக்கை விசாரிக்க வசதியாக சுவிட்சர்லாந்து நாட்டு அரசுக்கு கடிதம் எழுதுமாறு பிரதமர் கிலானிக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. ஆனால், அதை அவர் பொருள்படுத்தாமல் இருந்ததை அடுத்து அவர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப் பட்டு அவருக்கு தண்டனை வழங்கப்பட்டது.

எனினும் இந்த வழக்கில் கிலானி தரப்பில் மேல்முறையீடு ஏதும் செய்யப்படாததால் கடந்த ஏப்ரல் 26—ம் தேதி வழங்கப்பட்ட தீர்ப்பு இறுதி செய்யப்பட்டு நடைமுறைக்கு வருவதாக தலைமை நீதிபதி இஃப்திகார் சௌத்ரி தலைமையிலான மூவர் கொண்ட பெஞ்ச் நேற்று தீர்ப்பு வழங்கியது.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் தண்டனை பெற்ற கிலானி, கடந்த ஏப்ரல் 26 முதலே பிரதமர் பதவியை இழந்துவிட்டார். அது முதலே பிரதமர் இடம் காலியாக உள்ளது. எனவே கிலானி நாடாளுமன்ற உறுப்பினராக நீடிக்கவில்லை என்ற தகவலை முறைப்படி அறிவிக்குமாறு தேர்தல் கமிஷனை நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. மேலும் புதிய பிரதமரைத் தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கையை எடுக்குமாறு பாகிஸ்தான் அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது. கடந்த 2009—ம் ஆண்டு முதலே பாகிஸ்தான் அரசுக்கும் நீதித்துறைக்கும் இடையே மோதல் இருந்து வருகிறது.

இந்தத் தீர்ப்பை அடுத்து கடந்த ஏப்ரல் மாதம் 26—ம் தேதிக்குப் பிறகு பிரதமர் கிலானியும் அவரது அமைச்சரவையும் எடுத்த முடிவுகள் என்னவாகும் என்று தெரியவில்லை.

**வழக்கின் பின்னணி:**

இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பு முன்னாள் அதிபர் பர்வேஸ் முஷாரஃப் பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கும் அறிவிப்பை வெளியிட்டார். இதன் மூலம் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பயனடைந்தனர். தற்போது அதிபராக உள்ள ஆசிஃப் அலி ஜர்தாரியும் அதில் ஒருவர்.

ஜர்தாரிக்கு வழங்கப்பட்ட இந்தப் பொது மன்னிப்பு செல்லாது என்று பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம் 2009 டிசம்பரில் தீர்ப்பளித்தது. இதனைத் தொடர்ந்து, ஜர்தாரி மீதான பல கோடி ரூபாய் ஊழல் குற்றச்சாட்டுகளை மீண்டும் விசாரிக்க வேண்டும் என்றும் இது தொடர்பாக, சுவிட்சர்லாந்து அரசுக்கு பிரதமர் கிலானி கடிதம் எழுத வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் பாகிஸ் தான் அரசிடம் வற்புறுத்தி வந்தது.

ஆனால், பிரதமர் கிலானி தலைமையிலான அரசு இது தொடர்பாக எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. ஊழல் வழக்கை மீண்டும் விசாரிக்க வேண்டும் என்ற நீதிமன்றத்தின் முந்தைய உத்தரவை பிரதமர் செயல்படுத்தாததால் நீதிமன்றத்தை அவமதித்ததாக கிலானி மீது 7 நீதிபதிகள் கொண்ட உச்ச நீதிமன்ற பெஞ்ச் ஏப்ரல் 26—ல் குற்றஞ்சாட்டி யதுடன் இந்தக் குற்றத்துக்காக 'நீதிமன்றம் கலையும் வரை' தண்டனை வழங்கியது. நீதி மன்ற தண்டனை பெற்றதால் அவர் தகுதி இழப்பதாக உச்ச நீதிமன்றம் சுட்டிக் காட்டிய போதிலும் கிலானி பிரதமர் பதவியில் தொடர்ந்தார்.

இந்நிலையில், நீதிமன்றத்தின் சுதந்திரத் தன்மைக்கும் இறையாண்மைக்கும் எதிராக கிலானி நடந்து கொள்ளவில்லை. எனவே அவர் பிரதமர் பதவியிலிருந்து விலகத் தேவையில்லை. நீதிமன்றத்தை அவமதிக்கும் விதத்தில் அவர் செயல்படவில்லையாதலால் அவர் தகுதியிழப்பு அடையவில்லை என்று மக்களவைத் தலைவர் ஃபெஹமிதா மிர்ஸா கூறினார்.

இந்த நிலையில் ஏற்கெனவே மக்களவைத் தலைவரின் முடிவுக்கு எதிராக பல்வேறு தரப்பினர் உச்ச நீதிமன்றத்தில் முறையீடு செய்திருந்தனர். இந்த மனு நேற்று விசாரணைக்கு வந்தது. தலைமை நீதிபதி இஃப்திகார் சௌத்ரி தலைமையில் மூன்று நீதிபதிகள் இந்த வழக்கை விசாரித்து கிலானியை தகுதி நீக்கம் செய்து தீர்ப்பு வழங்கினர்.

## தேனி மாவட்ட இ.யூ. முஸ்லிம் லீக் துணைத் தலைவர்

# சின்னமனூர் எஸ். முஹம்மது அலி மகன் டாக்டர் எம். திவான் மைதீன் திருமணம்

தேனி, ஜூன்.20—

தேனி மாவட்ட இந்திய யூனியன் முஸ்லிம் லீக் துணைத் தலைவர் சின்னமனூர் எஸ். முஹம்மது அலியின் மகன் டாக்டர் எம். திவான் மைதீனுக்கும், பெரியகுளம் அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரியும் டாக்டர் எம். ரஹீமின் மகள் டாக்டர் ஆர். மைதீன்பீவிக்கும் உத்தமபாளையம் கனிப்பிரியா திருமண மஹாலில் 16—5—2012 அன்று நடைபெற்றது.

திருமண விழாவில் மாநில ஒழுங்கு நடவடிக்கை குழு தலைவரும், தேனி மாவட்ட இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவருமான கே.ஏ. அப்துல் ரவூப் தலைமையில் மாநில சொத்துப் பாதுகாப்புக்குழு உறுப்பினர் எம். சாஹுல் ஹமீது, மாவட்டச் செயலாளர் ஏ.எம். சாயபு, மாவட்டப் பொருளாளர் ஆர்.எம். அப்துல் நஸீர், மாவட்ட கவுரவ தலைவர் தேனி கோல்டன் முஹம்மது கனி ஹாஜியார், மாநில பொதுக்குழு உறுப்பினர் எம்.எஸ். மீரா முஹைதீன், அப்துல் அஜீஸ், ஹாரூன் ரஷீது, சையது ஷேக் அலி, அப்துல் ஸமது, மாவட்ட துணைத் தலைவர் சையது இப்ராஹீம்,

கம்பம் நகர செயலாளர் ஹனபி, சின்ன மனூர் நகரத் தலைவர் சிக்கந்தர் ஹாஜியார், செயலாளர் முஹம்மது பாரூக், பொருளாளர் ஆசிரியர் மஹபூப் அலி, பெரியகுளம் நகரத் தலைவர் ஜான்பா சாஹிப் ஹாஜியார், செயலாளர் நிஜாத் ரஹ்மான், உத்தமபாளையம் நகரத் தலைவர் முஹம்மது இப்ராஹீம், செயலாளர் முஹம்மது ரபி, பொருளாளர் அபுதாஹிர், பெரியகுளம் அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் ஜிந்தா மதார் முஹைதீன் மற்றும் ஜமாஅத் நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



லால்பேட்டை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ராகுல் காந்தி பிறந்த நாளை முன்னிட்டு ராஜீவ் காந்தி கல்வி குழுமத்தின் தாளாளர் டாக்டர் மணிரத்தினம் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு 114 மாணவர்களுக்கு இனிப்பு மற்றும் நோட்டு புத்தகம் வழங்கி சிறப்புரையாற்றினார். இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில துணைத் தலைவர் தளபதி.ஏ.ஷபிகுர் ரஹ்மான் வாழ்த்திப் பேசினார். நகர காங்கிரஸ் மு. தலைவர் அய்யூப் தலைமை தாங்கினார்.

இளைஞர் காங்கிரஸ் செயலாளர் முஹம்மது ஆசிக், முஹமத் அன்வர், நாசர், அப்துல் ரகீம், நூருல்லா, புஹாரி, மஹ்பூப் அலி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பள்ளியின் தலைமையாசிரியர் இராம. பாண்டியன் வரவேற்று பேசினார். ஜாக்கிர் உசேன், அமானுல்லா, பைஜீர் ரஹ்மான், சிதம்பரம், இளைஞர் காங்கிரஸ் தலைவர் ரஜினி காந்த், சிவசக்திராஜ், எ.கே.நடராஜன், ஜோதிபாசு, குணபாலன், லால்பேட் எக்ஸ்பிரஸ் நூருல் அமீன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.





மெக்சிகோ லாஸ் காபோஸ் நகரில் நடந்த ஜி–20 மாநாட்டில் கலந்து கொள்ள வந்த பிரதமர் மன்மோகன் சிங், அமெரிக்க அதிபர் ஒபாமா, ரஷ்ய அதிபர் விளாதிமிர் புதின் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார்.

### ஜி 20 உச்சி மாநாடு:

# பிரதமர் மன்மோகன்சிங் - அதிபர் ஒபாமா சந்திப்பு

மெக்சிகோ, ஜுன்.20–

மெக்சிகோவில் லாஸ் கபோஸ் நகரில் நடைபெற்று வரும் ஜி–20 உச்சி மாநாட்டில் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவை பிரதமர் மன்மோகன் சிங் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பு முன்னதாகத் திட்டமிடப்படாவிட்டாலும், ஐரோப்பாவில் நடந்து வரும் பொருளாதார நெருக்கடி குறித்து கடந்த இரு வாரங்களுக்கு முன்பு மன்மோகன் சிங், ஒபாமாவிடம் தொலை பேசியில் ஆலோசனை நடத்தி யிருந்தார். இதன் தொடர்ச்சி யாக, ஜி–20 மாநாட்டின் போது, இவர்களது சந்திப்பு திடீரென நடந்தது. முன்னதாக, மாநாட்டில் மன் மோகன் சிங் 15 நிமிடங்கள் உரையாற்றினார்.

அதில் அவர் பேசியதாவது–

சர்வதேச பொருளாதாரச் சூழ்நிலை ஆழ்ந்த கவலை அளிப்பதாக உள்ளது. சிக்கலி ருந்து மீள்வது தள்ளாட்ட மாகவே உள்ளது. நன்றாக வளர்ச்சி அடைந்து கொண்டி ருந்த சந்தைகள் கூட, தற்போது சரிவைச் சந்திக்கின்றன. ஐரோப்பிய மண்டலத்தில் ஏற்பட்டுள்ள நிச்சயமற்ற தன்மை, நாடுகளுக்குள் ஏற் பட்டுள்ள கடன் சிக்கல் மற்றும் வங்கிப் பிரச்னைகள் சர்வதேச பொருளாதாரத்தில் பாதிப்பு களை ஏற்படுத்தி விட்டன. வங்கித் துறையில் ஏற்பட்ட கூடுதல் கடன் சுமை மற்றும் வளர்ச்சியற்ற சூழ்நிலையே ஐரோப்பிய பொருளாதாரச் சிக்கல்களுக்குக் காரணம். வங்கிக் கடன் சிக்கல் வர்த் தகத்தில் தாக்கத்தை ஏற்படுத் தக் கூடியது. அது சர்வதேச பொருளாதாரத்திலும் பாதிப்பை ஏற்படுத்தும். ஐரோப்பிய மண்டலத்தில் உள்ள நாடுகள் வங்கித் துறையைப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதேயே ஜி–20 மாநாடு குறிப்பிட விரும்புகிறது.

ஐ.எம்.எப்., தற்காப்பு நிதிக்கு நாடுகள் தங்கள் பங்களிப்பை வழங்க வேண்டும். இந்தியா ரூ. 50 ஆயிரம் கோடியை இதற்காக வழங்குகிறது. ஐ.எம்.எப்., அமைப்பின் நிதி ஆதாரங்கள் பணக்கார நாடுகளின் திட் டங்களுக்கு அதிகமாக வழங் கப்பட்டிருக்கிறது. தற்போது பணக்கார நாடுகளே பொரு ளாதாரச் சிக்கலில் இருக்கும் போது, வளரும் மற்றும் வளர்ச்சி குறைந்த நாடுகள் மிகுந்த சிக்கலை சந்தித்து வரு கின்றன. ஐ.எம்.எப்., நிதி உதவி வளரும் நாடுகளுக்கும் உதவு வதாக இருக்க வேண்டும். இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 8.4 சதவீதத்திலிருந்து 6.9 சதவீதமாகக் குறைந்து விட்டது. எனினும் இந்தியப் பொருளாதாரத்தின் அடிப்படை நன்றாக உள்ளதால் 8 – 9 சதவீத வளர்ச்சிக்கு மீண்டும் திரும்புவோம் என்று நம்புகி றோம்.

இவ்வாறு பிரதமர் பேசினார்.

ஜெர்மன் சான்சலர் ஏஞ்சலா மெர்கல், மெக்சிகோ அதிபர் பெலிப் கால்ட்ரன் மற்றும் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவை பிரதமர் மன்மோகன் சிங் தனித்தனியே சந்தித்துப் பேசியுள்ளார். நாளை ரஷ்ய அதிபர் புடினையும், கனடா பிதரமரையும் மன்மோகன் சிங் சந்திக்கிறார். ஜி–20 மாநாட்டின் நிறைவு நாளில் தீர்மானம் வெளியாக உள்ளது. இம் மாநாட்டு நிகழ்ச்சிகளை முடித் துக் கொண்டு பிரதமர் பிரேசி லில் உள்ள ரியோ டி ஜெனிரோ நகருக்குப் புறப்பட்டுச் செல் கிறார்.



முதல்வர் ஜெயலலிதா நேற்று தலைமைச் செயலகத்தில், போக்கு வரத்துத் துறையில் ரூ. 5 கோடியே 18 லட்சத்து 43 ஆயிரம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள 7 அலுவலகக் கட்டிடங்கள், ஒரு சோதனைச் சாவடி கட்டிடம் மற்றும் ஒரு ஓட்டுநர் தேர்வுத்தளம் ஆகியவற்றை காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்.



முதல்வர் ஜெயலலிதா நேற்று தலைமைச் செயலகத்தில், பணியில் இருக்கும்போது இறந்துபோன 400 போக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

### பவானி ஆற்றின் குறுக்கே

# கேரள அரசு அணை கட்டுவதை தமிழக அரசு தடுக்க வேண்டும்

### தி.மு.க. தலைவர் கலைஞர் அறிக்கை



சென்னை, ஜுன்.20:

பவானி ஆற்றின் குறுக்கே கேரள அரசு அணை கட்ட முயற்சிப்பதை தமிழக அரசு தடுக்க வேண்டும் என்று திமுக தலைவர் கலைஞர் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

திருப்பூருக்கு குடிநீர் ஆதார மாக விளங்கும் பவானி ஆற் றின் குறுக்கே அட்டப்பாடியில் கேரளம் புதிதாக அணை கட்டி னால் நீர்வரத்து குறைந்து திருப்பூர், கோவை மாநகராட்சி, மேட்டுப்பாளையம் நகராட்சி உள்பட பல பேரூராட்சிகளில் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்படும்.

இப்படி அணைகளைக் கட்டி தமிழக மக்களின் குடிநீர் ஆதா ரத்தையும், தமிழக விவசாயி களின் வாழ்வாதாரத்தையும் கேள்விக்குறியாக்க முனையும் கேரளத்தின் முயற்சியை தமிழக அரசு தடுக்க முன் வருமா ?

**மீனவர் பிரச்னை:**

ராமேசுவரம் மீனவர்களை இலங்கை கடற்படையினர் விரட்டியடித்து விட்டதாகச் செய்தி வந்திருக்கிறது. இது கண்டிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

மீனவர் பிரச்னை தொடர்பாக மத்திய அரசுக்கு எத்தனையோ முறை நாம் வேண்டுகோள் விடுத்தும், அவர்களும் முயற் சித்து பல முறை பேச்சுவார்த்தை நடத்திய போதிலும் இலங்கை கடற்படையினர் அட்டூழியம் நின்றபாடில்லை.

இந்தச் சம்பவம் திமுக ஆட்சியில் நடைபெற்றிருந்தால், மத்திய அரசில் இருந்து திமுக விலக வேண்டியதுதானே என்று கேட்டிருப்பார்கள். ஆனால் அப்படிச் சொன்னவர்கள் இப் போது வாயே திறக்கவில்லை.

# சாலையோர விளம்பரங்கள், கட்சி கொடிகளுக்கு விரைவில் தடை

### சென்னை மேயர் சைதை துரைசாமி அறிவிப்பு

சென்னை, ஜுன்.20:

சாலைகளில் விளம்பரங்கள், கட்சிக் கொடிகள் ஆகியவற்றை வைப்பதற்கு விரைவில் தடை விதிக்கப்படும் என்று சென்னை மாநகராட்சி மேயர் சைதை துரைசாமி தெரிவித்தார்.

சென்னை மாநகராட்சி மாமன்றக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் கடந்த நவம்பரில் நடந்த மாமன்றக் கூட்டதில், சாலையோர விளம் பரங்கள், பொதுக்கூட்ட மேடை கள், கொடிகள் ஆகியவற்றை சாலைகளில் அமைக்க கட்டுப் பாடு விதிப்பது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என்று மேயர் தெரிவித்தார்.

இதுகுறித்து மேலும் அவர் கூறியதாவது:

சென்னையை எழில்மிகு சென்னையாக மாற்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன. கட்சி களின் பொதுக்கூட்டங்கள், மன்ற நிகழ்ச்சிகள், கோயில் திருவிழாக்களின்போது கொடி கள், மேடைகள் ஆகியவை அமைக்கப்படுகின்றன. இதற் காக குழிகள் தோண்டப்படுவ தால் சாலைகள் சேதமடை கின்றன.

இவற்றை ஒழுங்குபடுத்த வேண்டும். எதிர்காலத்தில் சாலைகள் கான்கிரீட் மூலம் அமைக்கப்படவுள்ளதால் சாலை கள் சேதமடையாமல் இருக்க இவற்றை கட்டுப்படுத்த வேண் டும்.

ஒவ்வொரு வார்டிலும் அடிக் கடி நிகழ்ச்சிகள் நடக்கும் இடங் களைக் கண்டறிந்து, நிகழ்ச் சிகள் நடத்துவதற்கு ஏதுவாக தரையில் துருப்பிடிக்காத இரும்பு மூலம் குழாய்கள் அமைக்கப்படும்.

இந்த குழாய்களில் கொடி களை நடலாம். இவற்றை மேடை அமைக்கவும் பயன்படுத்தலாம்.

மேலும், தோரணம் கட்டுப வர்களிடம் தோரணங்களின் எண்ணிக்கைக்கு தகுந்தவாறு வைப்புத் தொகை வசூலிக்கப் படும். குறிப்பிட்ட நாள்களுக்குள் அவற்றை அகற்றவில்லை என் றால், வைப்புத் தொகை திருப் பித் தரமாட்டாது.

பொது இடங்களில் விளம்பர போஸ்டர்கள், பேனர்கள் வைக்க உடனடியாக தடை விதிக்க வேண்டும். விளம்பரப் பலகைகள் அந்த இடங்களில் மட்டுமே வைக்கவேண்டும். இதற்கு கட்டணம் வசூலிக்க வேண்டும்.

இவற்றை உடனடியாக அமல்படுத்துவது கட்டாயம். இவற்றுக்கான தகுந்த இடங்கள் குறித்து மாநகராட்சிக்கு உறுப் பினர்கள் தெரிவிக்கவேண்டும். இவற்றை அமல்படுத்துவற்கான தேதி விரைவில் அறிவிக்கப் படும் என்றார்.



வருவாய்த்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் தலைமையில்,, வருவாய்த்துறையின் சார்பில் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத்திட்டங்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இதில் வருவாய்த்துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## முதல்வரின் இணை செயலர் நியமனம்

சென்னை, ஜுன்.20:

முதல்வரின் இணைச் செய லராக ஐ.ஏ.எஸ்., அதிகாரி சுட லைக்கண்ணன் நியமிக்கப் பட்டுள்ளார்.

இதுகுறித்து, அரசு செயலர் குமார் ஜெயந்த் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பின் விவரம்:

தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவன மேலாண் இயக்குனராக இருந்த சுடலைக்கண்ணன், முதல்வரின் இணைச் செயல ராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு, செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஐரோப்பிய நாடுகளில் நிதி நெருக்கடி

# இந்தியா ரூ.55ஆயிரம் கோடி நிதி உதவி

லாஸ் கேபோஸ், ஜுன்.20:

ஐரோப்பிய நாடுகளில் நிலவும் நிதி நெருக்கடிக்கு உதவ இந்தியா 1,000 கோடி டாலர் (சுமார் ரூ. 55,000 கோடி) அளிக்க முன்வந்துள்ளது.

மெக்ஸிகோவில் உள்ள லாஸ் கேபோஸில் நடைபெறும் பிரிக்ஸ் மாநாட்டில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. ஐரோப்பிய நாடுகளில் நிலவும் நிதி நெருக் கடியைப் போக்க 7,500 கோடி டாலர் நிதியத்தை சர்வதேச செலாவணி நிதியத்துக்கு அளிப்பதென முடிவு செய்யப் பட்டது. இதில் இந்தியாவின் பங்களிப்பு 1,000 கோடி டாலரா கும். பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் நடைபெற்ற கூட் டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட் டது.

இந்தக் கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள சீனா 4,300 கோடி டாலரை அளிக்க ஒப்புக் கொண்டுள்ளது. ரஷியா மற்றும் பிரேஸில் ஆகிய நாடுகள் தலா 1,000 கோடி டாலர் அளிக்க ஒப்புக் கொண்டுள்ளன. தென் னாப்பிரிக்கா 200 கோடி டாலரை அளிக்க ஒப்புக் கொண் டுள்ளது. ஏற்கெனவே உள்ள நிதி ஆதாரத்துடன் கூடுதலாக இந்தத் தொகை சர்வதேச செலாவணி நிதியத்துக்கு அளிக்கப்படுகிறது. இதன் மூலம் கூடுதலாக கடன் பெறு தல் அதை உரிய வகையில் செல விடுதல் போன்றவை மேற் கொள்ளப்படும். சர்வதேச செலா வணி நிதியத்தில் பங்குதாரர் களாக உள்ள நாடுகளின் நிதிச் சுமையைக் குறைக்கும் நோக் கத்தில் இந்த முடிவு எட்டப்பட் டுள்ளது.

இந்த நிதித் தொகையை எவ்விதம் அளிப்பது என்பது குறித்து பிரிக்ஸ் நாடுகளின் நிதி அமைச்சர்கள் கூடி ஆலோ சித்து 2013–ம் ஆண்டு பிரிக்ஸ் மாநாட்டுக்கு முன் அறிக்கை அளிப்பர். நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள நாடுகளில் பன்முக மேம்பாட்டு வங்கிகள் தொடங் கப்பட வேண்டும். இதன் மூலம் அந்நாடுகளுக்கு எளிதாக கடன் கிடைக்கும். பொருளா தாரம் மீட்சியடையும் என கூட் டத்தில் பேசிய தலைவர்கள் குறிப்பிட்டனர்.

### சென்னையில்

# ரூ.30 கோடியில் 30 அதிநவீன காவல் உதவி மையங்கள்

சென்னை, ஜுன்.20:

சென்னையில் ரூ. 3 கோடி யில் 30 இடங்களில் அதிநவீன காவல் உதவி மையங்கள் அமைக்கப்படுகின்றன.

இந்த மையங்கள் சூரிய சக்தியின் மூலம் இயங்கும் வகையில் வடிவமைக்கப்பட் டுள்ளது. மேலும் இந்த மையங் களில் 24 மணிநேரமும் இயங் கும் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டுள்ளன.

சென்னை பெருநகர காவல் துறையை நவீனப்படுத்து வதற்கு பல்வேறு நடவடிக்கை கள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக சென்னை காவல்துறைக்கு ஒரு தனியார் நிறுவனமும், தன்னார்வ அமைப் பும் இணைந்து அதிநவீன காவல் உதவி மையங்களை அமைத்து கொடுக்க முன் வந்துள்ளன.

இவ்விரு அமைப்புகளும் ரூ. 3 கோடியில் 30 இடங்களில் இந்த அதிநவீன காவல் உதவி மையங்களை அமைக்கின்றன. இப்போது சென்னை மெரினா கடற்கரையில் தொழிலாளர் சிலை, காந்தி சிலை மற்றும் தலைமைச் செயலக வளாகம் ஆகிய 3 இடங்களில் அமைக் கப்பட்டு வருகின்றன. இந்த மையம் முழுமையும் சூரிய ஒளி யில் இருந்து உற்பத்தி செய்யப் படும் மின்சாரம் மூலம் செயல் படும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது. மேலும் இந்த மையத்தில் 3 கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள் ளன. இந்த கேமரா 24 மணி நேரமும் இயங்கும். இந்த கேமரா மூலம் 200 மீட்டர் தூரம் வரை நடைபெறும் காட்சிகளைப் பதிவு செய்ய முடியும். கேமராவில் பதிவு செய்யப்படும் காட்சிகள் 45 நாள்கள் சேமித்து வகையில் சர் வரும், கம்ப்யூட்டரும் உள்ளது.

இதேபோல ஒலி பெருக்கி அதில் அமைக்கப்பட்டுள்ளது. கட்டடமாக இல்லாமல் அலுமி னியம், மரம், கண்ணாடியினால் ஆன இந்த மையம் காண் போரை கவரும் வகையில் உள் ளது. இதன் அடிப்பாகம் மட்டும் சிமெண்ட்டில் அமைக்கப்பட்டுள் ளது.

இதற்குள் அந்நியர்கள் யாரும் நுழையாமல் இருப்பதற்கு பயோ மெட்ரிக் கார்டு வசதியும் செய்யப்பட்டுள்ளது. இந்த காவல் உதவி மையம் முழுமை யாக அமைப்பதற்கு ரூ. 10 லட் சம் வரை செலவிடப்படுவதாக போலீஸார் தெரிவித்தனர்.

முதல் கட்டமாக 3 இடங் களில் அமைக்கப்பட்டு வரும் இந்த காவல் உதவி மையங்கள் விரைவில் செயல்பாட்டுக்கு வரவுள்ளன. இதேபோல 27 காவல் உதவி மையங்கள் நக ரின் முக்கியமான மற்றும் நெரி சல் மிகுந்த பகுதிகளில் அமைக்கப்பட உள்ளதாக போலீ ஸார் தெரிவிக்கின்றனர்.

### 'பசுமை மன்றங்கள்' 'தேசிய பசுமைப்படை'

# சுற்றுச்சூழல் குறித்து பள்ளிக் குழந்தைகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த ரூ.46.73கோடி ஒதுக்கீடு

### தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, ஜுன்.20:

தமிழகம் முழுவதும், 1,869 பள்ளிகளில் உள்ள பசுமை மன்றங்கள், தேசிய பசுமைப் படைகளை வலுப்படுத்த, 46.73 கோடி ரூபாயை ஒதுக்கி, தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. சுற் றுச்சூழலை பாதுகாக்க, தமிழக வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை, மத்திய அரசு இணைந்து, பள்ளிகளில் பசுமை மன்றங்கள், தேசிய பசுமை படையை உரு வாக்கி உள்ளது.

குழந்தைகளிடையே சுற்றுச் சூழல் மற்றும் அது தொடர்பான பிரச்னைகள் குறித்து உணரச் செய்தல்; பள்ளிக் குழந்தை களுக்கு, சுற்றுச்சூழல் கல்விக் கான வாய்ப்பை ஏற்படுத்துதல்; சமூகத்தில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த பள்ளிக் குழந்தை களை பயன்படுத்துதல்; சுற்றுச் சூழல் மற்றும் வளர்ச்சி தொடர் பான முக்கிய முடிவுகள் எடுக் கும் நேரத்தில், குழந்தைகளின் பங்களிப்பை ஏற்படுத்துதல் ஆகியவை, இந்த பசுமை மன்றங்களின் முக்கிய பணி.

தமிழக அரசின் நிதியுதவி யுடன், 32 மாவட்டங்களில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் 1,869 பள்ளிகளில், பசுமை மன்றம், பசுமை படை துவக்கப் பட்டு அமலில் உள்ளது. அடுத் தக்கட்டமாக, மத்திய அரசின் நிதியுதவியுடன் தேசிய பசுமைப் படை திட்டம், ஒரு மாவட்டத் திற்கு, 250 பள்ளிகள் வீதம், 8,000 பள்ளிகளில் கொண்டு வரப்பட்டு, மொத்தம் 9,869 பள் ளிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு பள்ளியிலும், 40 முதல் 50 மாணவர்கள் என, நான்கு லட்சம் மாணவர்கள் இத் திட்டத்தின் கீழ் வருகின்றன. இதற்காக, ஒரு பள்ளிக்கு, 2,500 ரூபாய் வீதம், ஆண்டு தோறும் நிதியுதவி வழங்கப் படு கிறது. மாநில அரசின் நிதியு தவியின் கீழ் திட்டத்தை செயல் படுத்தும், 1,869 பள்ளிகளுக்கு, பள்ளிக் கல்வி துறையின் மூலம் நிதியை வழங்க ரூ.46.73 லட்சம் ஒதுக்க சுற்றுச் சூழல் துறை இயக் குனர் அரசுக்கு திட்ட அறிக்கை அளித் தார். இதையேற்று, தமிழக அரசு 46.73 லட்சம் ரூபாய் ஒதுக்கி உத்தரவிட்டுள்ளது.

# தமிழகத்திற்கு தேவையான உரங்கள் வழங்கப்படும்

### மத்திய வேளாண் அதிகாரிகள் உறுதி

சென்னை, ஜுன்.20:

தமிழக வேளாண் துறை அதிகாரிகளுடன், சென்னை யில் ஆலோசனை நடத்திய, மத்திய வேளாண் துறை உயர் அதிகாரி, 'தமிழகத்திற்கு தேவையான உரங்கள் வழங்கப் படும்' என, உறுதி அளித்துள் ளார். ஒவ்வொரு மாதத்திற்கும் தேவையான உரங்கள் பட்டியல், தமிழக வேளாண் துறை சார்பில், மத்திய உரத்துறைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

தேவை அதிகம் இல்லாத யூரியா மட்டும், கேட்டதுக்கும் அதிகமாக கொடுக்கப்படு கிறது. தேவை அதிகமுள்ள டி.ஏ.பி., கலப்பு உரம், எம்.ஓ.பி., உள்ளிட்டவை குறைந்த அளவே தரப்படுகிறது. இதனால், தற் போது தமிழகத்தில் துவங்கி யுள்ள, குறுவை சாகுபடி பாதிக் கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தின் உரத்தேவை குறித்து, ஆலோசனை நடத்து வதற்காக டெல்லியில் இருந்த மத்திய வேளாண் துறை இணை செயலர் ஆர்.பி.சின்கா (திட்ட மிடல் பிரிவு) நேற்று சென்னை வந்தார். சென்னை வாலாஜா சாலையில் உள்ள, வேளாண் துறை கமிஷனர் அலுவலகத் தில், இது குறித்து அவர் நீண்ட ஆலோசனை நடத்தினார்.

காலை 9.30 மணிக்கு, துவங்கிய ஆலோசனை, பகல் 1.30 மணி வரை நடந்தது. இதில் தமிழக வேளாண் கமிஷனர் சிவ்தாஸ் மீனா மற்றும் துறை அதிகாரிகள், மத்திய வேளாண் துறையின் தமிழக அதிகாரிகள் பலர் பங்கேற்றனர். குறுவை சாகுபடிக்கு தேவையான உரங் கள் மட்டுமின்றி, நெல் விதை கள், தானியம், பயிர் விதைகள் தேவை குறித்தும் அவர் ஆய்வு மேற்கொண்டார். அப்போது, 'தமி ழகத்திற்கு தேவையான உரங் கள் தற்போது வழங்கப்பட்டுள் ளது. சாகுபடி அதிகரிக்கும் பட் சத்தில், தேவையான உரங்கள், உட னுக்குடன் வழங்கப்படும்' என, சின்கா அதிகாரிகளிடம் உறுதி யளித்துள்ளார்.



தமிழகத்தின் நெல் வரத்து இருப்பு மற்றும் மானிய கோரிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் ஆகியவை குறித்த ஆய்வுக் கூட்டம் உணவுத்துறை அமைச்சர் தலைமையில் நடைபெற்றபோது எடுத்த படம்.

மணிச்சுடர்

சந்தா விகிதம்

| | |
|---|---|
| ஓர் ஆண்டு | 1000 ரூ |
| 6 மாதம் | 500 ரூ |
| 3 மாதம் | 250 ரூ |





# மணிச்சுடர்

இ-பேப்பரில் மணிச்சுடர் நாளிதழ் படிக்க : www.muslimleaguetn.com



இதயங்களை இணைப்போம் ! சமூக நீதி சமைப்போம் !

இறைஅருளாளர்,
தீன்இசைக்கவிஞர்-சமுதாயச்செம்மல்,
வடக்குக்கோட்டையார்



அல்ஹாஜ் வ.மு.செய்யது அகமது B.com.,BGL

அறங்காவலர்: வடக்குக்கோட்டையார் முகம்மது அப்துல்லா அறக்கட்டளை

அலைபேசி: 9940041157, இணையதளம்: www.vadakkukottaiyar.com




புதுக்கோட்டை இடை தேர்தலில் வெற்றி பெற்ற அ.தி.மு.க., எம்.எல்.ஏ., கார்த்தி தொண்டைமான் சபாநாயகர் ஜெயக்குமார் அறையில் பதவிப்பிரமாணம் எடுத்து கொண்டார். அருகில் முதல்வர் ஜெயலலிதா மற்றும் அமைச் சர்கள் உள்ளனர்.

# குடியரசு தலைவர் தேர்தல்: தே.மு.தி.க. புறக்கணிப்பு

## விஜயகாந்த் அறிக்கை

சென்னை, ஜுன்.20:

குடியரசுத் தலைவர் தேர்தலைப் புறக்கணிப்பதாக தேமுதிக தலைவர் விஜயகாந்த் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது:

காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை நெல் சாகுபடிக்கு ஜுன் 12-ம் தேதி மேட்டூரில் இருந்து தண்ணீர் திறந்து விடவேண்டும்.

ஆனால் தண்ணீர் திறந்து விடுவதற்கு போதிய தண்ணீர் இல்லை. கர்நாடகம் காவிரியில் தண்ணீர் விட மறுப்பதே இதற்குக் காரணம். 40 ஆண்டுகளுக்கு மேலாக இந்தப் பிரச்னை நீடித்து வருகிறது.

முல்லைப் பெரியாறு அணையில் உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகும்கூட நீர் மட்டத்தை 136 அடியில் இருந்து 142 அடியாக உயர்த்த முடியவில்லை. இந்தப் பிரச்னை 20 ஆண்டுகளுக்கும் மேலாக தீரவில்லை.

வட மாவட்ட மக்களின் குடிநீருக்கும், விவசாயத்துக்கும் பயன்படும் பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு தடுப்பணை கட்ட முயலுகிறது. அதையும் தடுப்பார் யாரும் இல்லை.

நெய்யாற்றின் இடதுகரைக் கால்வாய் மூலம் கன்னியாகுமரி மாவட்டம் பயன் பெற்று வருகிறது. கேரள அரசு அண்மைக் காலமாக இதிலும் தண்ணீர் விட மறுத்து வருகிறது.

இவ்வாறாக பல வகையிலும் தமிழகம் பாதிப்புக்கு ஆளாகிறது.

மாநிலங்களுக்கு இடையேயான பிரச்னையைத் தீர்ப்பதற்குத்தான் மத்திய அரசு இருக்கிறது. ஆனால் தமிழகத்தின் பிரச்னைகளை மத்திய அரசு தீர்க்கவில்லை என்பதுதான் வரலாறு.

இந்தியாவில் ஆட்சி மொழியாக தமிழும் இடம்பெற வேண்டும் என்று தமிழகத்தைச் சேர்ந்த தலைவர்கள் எவ்வளவோ முயன்றும் இன்னும் இடம் பெறவில்லை.

இவ்வாறு தமிழர்களும், தமிழும் கடந்த காலங்களில் இந்திய அரசால் புறக்கணிக்கப்பட்டதோடு, தமிழர்கள் வாழ்வையும் உரிமையையும்கூட இழந்து வருகின்றனர்.

இதன் உச்சகட்டமாக இலங்கையில் உள்ள தமிழர்களின் இனப் படுகொலைக்கும் இந்திய அரசு உடந்தையாக இருந்துள்ளது. தமிழினப் படுகொலை நடந்தபோது அதைத் தட்டிக் கேட்க இந்திய அரசு முன்வரவில்லை.

இதன் காரணமாக 2009-ல் நடைபெற்ற மக்களவைத் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். ஆனால் யாரும் செவி சாய்க்கவில்லை. இப்போது நடைபெறும் குடியரசுத் தலைவருக்கான தேர்தலாலும் தமிழக மக்களுக்குப் பயன் இல்லை. ஒவ்வொரு தேர்தலிலும் தமிழ்நாட்டு மக்கள் ஏமாற்றப்படுகின்றனரே தவிர, அவர்களது குறையைக் களைய மத்தியில் உள்ளவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கூட்டணிக் கட்சிகளாலும் எதுவும் செய்ய இயலவில்லை. எனவே குடியரசுத் தலைவர் தேர்தலில் கலந்து கொள்ளாமல் இருப்பதே தமிழ்நாட்டுக்கு செய்யும் நன்மையாகும். இதனால் தேதிமுக தேர்தலைப் புறக்கணிக்கிறது என்று அவர் கூறியுள்ளார்.

### வாக்குகள் எவ்வளவு ?

தமிழக சட்டப் பேரவையில் தேமுதிக உறுப்பினர்கள் எண்ணிக்கை 29 ஆகும். ஒரு சட்டப் பேரவை உறுப்பினரின் வாக்கு மதிப்பு 176 ஆகும். தேமுதிக வின் மொத்த உறுப்பினர்களின் மொத்த வாக்குகளின் மதிப்பு 5,104 ஆகும்.

## தேவதானப்பட்டி நகரத் தலைவர்

# அப்துல் லத்தீப் சிஷ்தி இல்லத் திருமணம்

தேவதானப்பட்டி, ஜுன்.20-

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேவதானப்பட்டி நகரத் தலைவரும், தேனி மாவட்ட கவுரவ ஆலோசனைக்குழு உறுப்பினருமான அப்துல் லத்தீப் சிஷ்தி மகள் வழிப் பேத்தியும், அப்பாஸின் புதல்வியுமான ஆலிமா தாஹிராபானுவுக்கும், பெரியகுளம் பி. அப்துல் ரஹீம் புதல்வர் ஏ. சித்தீக் ரஹ்மானுக்கும் கடந்த 16-5-2012 பெரியகுளம் மாங்கனி மஹாலில் திருமணம் நடை பெற்றது.

விழாவில் தேனி மாவட்ட இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆலிம்கள் அணி அமைப்பாளரும், மஜீதிய்யா மதரஸா நிஸ்வான் ஸ்தாபகர் எஸ். முஹம்மது யூசுபி, ஜெகதாபட்டினம் பள்ளிவாசல் இமாம் ஜாபர் அலி, மாநில எம்.எஸ்.எஃப். அமைப்புக்குழு உறுப்பினர் எம். அப்துல் பாஸித் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

தேனி மாவட்ட இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் கே.ஏ. அப்துல் ரவூப், மாவட்டச் செயலாளர் ஏ.எம். சாயபு, மாவட்டப் பொருளாளர் ஆர்.எம். அப்துல் நஸீர் ஆகியோர் அப்துல் லத்தீப் சிஷ்தியை சந்தித்து மணமக்களுக்கு வாழ்த்து தெரிவித்து துஆ செய்தனர்.

## இந்திய ரூபாயின் மதிப்பில் உயர்வு

மும்பை, ஜுன்.20:

சர்வதேச சந்தைகளில் ஏற்பட்டுள்ளது. உயர்வின் காரணமாகவும், இந்திய பங்குச் சந்தைகள் ஏற்றத்துடன் துவங்கி இருப்பதாலும் சர்வதேச சந்தையில் அமெரிக்க டாலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பு ரூ.55.91 ஆக உள்ளது. நேற்றைய வர்த்தக நேர முடிவில் இந்திய ரூபாயின் மதிப்பு ரூ.55.95 ஆக இருந்தது குறிப்பிடத்தக்கது.




முதல்வர் ஜெயலலிதா சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக கோவை மாவட்டத்தில் ரூ. 15.12 கோடி மதிப்பீட்டில் சுந்தராபுரம்-மதுக்கரை செல்லும் வழியில் கட்டி முடிக்கப்பட்ட மேம்பாலத்தை திறந்து வைத்தார். அப்போது கோவை சுந்தராபுரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் மு.கருணாகரன், சட்டமன்ற உறுப்பினர்கள், பொறியாளர், கோட்டப் பொறியாளர் மற்றும் பள்ளி மாணவ-மாணவிகள் கலந்துகொண்டனர்.

## சாதனை புரியும் சீரிய ஆயுதம்...

(முதல் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்றுவது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விரைவில் பல வண்ணங்களில் அச்சிடும் வகையில் புதிய அச்சு எந்திரங்கள்வரும் வாய்ப்புள்ளது என்றும், அதைத் தொடர்ந்து, பல வண்ணங்களில் அச்சிடவும், வார மலர் மற்றும் அதிக பக்கம் எல்லாம் அமைக்கவும் இயலும் என்பது விளக்கப் பட்டிருக்கிறது.

'மணிச்சுடர்' வெள்ளி விழா - ரமளான் மலரில் குறைந்தது ஆயிரம் பக்கங்களாவது இருக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பக்கத்திலும் தலைப்பின் இரு முனைகளிலும் 'பேனல்' விளம்பரம் செய்வது என்றும் ஒவ்வொரு 'பேனல்' விளம்பரத்திற்குரிய கட்டணம் ரூ.2500/- என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

'மணிச்சுடர்' வெள்ளி விழா - ரமளான் மலர், காலா காலத்திற்குப் பாதுகாத்து வைப்பதற்குரியது. ஆவணமாகத் திகழும் வகையில் வெளிவருகிறது.

அதன் சிறப்புக்கு எல்லோருடைய ஒத்துழைப்பும் நிறைவாக அமைந்திடுதல் அவசியமாகும்.

இயக்கத்தில் உள்ளவர்களுக்கும், சமுதாயப் பெருமக்களுக்கும், வளரும் இளந்தலை முறையினருக்கும் ஒரு முக்கிய செய்தியை நினைவுப்படுத்துவது நமது கடமையாகும்.

இந்திய இஸ்லாமிய சமுதாயம் ஒரு மிகப் பெரும் திருப்பு முனையை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறது. அந்தத் திருப்புமுனையை, சமுதாய முன்னேற்றத்துக்கான திருத்து முனையாக மாற்றி அமைக்க வேண்டிய பொறுப்பில் இன்று நாம் அனைவரும் இருக்கிறோம்.

இந்தச் சாதனை புரிய நமக்குள்ள சீரிய ஆயுதம் 'மணிச்சுடர்' நாளேடுதான்! அதனை வலிமைப்படுத்தி, சமுதாயத்தை வளப்படுத்துவோம்! மணிச்சுடரைப் பலப்படுத்தி, மார்க்கப் பணியால் சமுதாயத்தைப் பயனடையச் செய்வோம்!

மணிச்சுடரை விரிவுபடுத்தி, தமிழகத்தில் அரசியல் வாழ்வில் விளங்குபுகழ் நிலை நிறுத்துவோம்!

# உலகச் செய்திகள்

## இன்று உலக அகதிகள் தினம்: நாடுகள் ஒன்றிணைந்து செயல்பட பான்கீ மூன் வலியுறுத்தல்

இன்று உலக அதிகள் தினம் அனுசரிக்கப்படுகிறது. உலகில் உள்ள எல்லா நாடுகளிலும் பல்வேறு அரசியல் மற்றும் பொருளாதாரம் , உள்நாட்டு போர் ஆகிய காரணங்களால் அங்கு வாழும் மக்கள் அகதிகளாக வெளியேறுகின்றனர். எந்த ஒரு நாட்டிலும் உள்நாட்டு குழப்பம் ஏற்படும் போதோ, இனகலவரம் ஏற்படும் போதோ முதலில் பாதிக்கப்படுவது அப்பாவி மக்கள் தான். இவர்கள் அகதிகளாக இடம் பெயருகின்றனர்.

அந்த வகையில் முதன் முதலாக ஆப்ரிக்க கண்டத்தில் தான் முதன்முதலாக ஜுன் 20-ம் தேதி அகதிகள் தினமாக அனுசரிக்கப்பட்டது. ஆப்ரிக்க கண்டங்களில் உள்ள 50-ம் மேற்பட்ட நாடுகளில் சோமாலியா, எத்தியேபியா போன்ற நாடுகளில் பசி, பஞ்சம், பட்டினி போன்றவை தலைவிரித்தாடுகின்றன. சில நாடுகளில் உள்நாட்டு போர், பயங்கரவாதிகளின் தாக்குதல் போன்ற பல்வேறு காரணங்களால் அங்குள்ள மக்களை பக்கத்து நாடுகளுக்கு இடம் பெயர வைத்துள்ளது. இந்நிலையில் கடந்த 2000-ம் ஆண்டு டிசம்பர் 4-ம் தேதி அன்று ஐ.நா. பொதுச்சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் படி பல்வேறு காரணங்களால் இடம் பெயரும் மக்களுக்கு அகதிகள் அந்தஸ்து வழங்கப்பட்டது.இதைத்தொடர்ந்து தான் ஐ.நா.வின் மனித உரிமை அமைப்பு சார்பில் ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 20-ம் தேதி சர்வதேச அகதிகள் தினம் அனுசரிக்கப்படுகிறது.

சமீபத்தில் வங்கதேசம், மியான்மரில் நடந்த இன கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்கள் அகதிகளாக மியான்மரில் குடியேற முயன்ற போது அவர்களுக்கு அடைகலம் கொடுக்க மறுக்கப்பட்ட சம்பவமும் நிகழ்ந்துள்ளது.சர்வதேச அகதிகள் தினத்தையொட்டி ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கையில் கடந்த 2011-ம் ஆண்டில் உலக முழுவதும் 8 லட்சம் அகதிகள் கட்டயமாக நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். இவற்றில் ஆசிய நாடான இந்தியாவில், பக்கத்துநாடான இலங்கை, திபெத் ஆகிய



நாடுகளைச்சேர்ந்தவர்கள் தான் 2 லட்சம் அகதிகளாக வந்துள்ளனர். தவிர பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் நாடுகளில் இருந்தும் அகதிகள் இடம் பெயர்ந்துள்ளதாக ஐ.நா. மனித உரிமை அமைப்பு கூறியுள்ளது.தற்போது ஐ.நா. மனித உரிமை அமைப்பு, உலக அகதிகள் தினமான இன்று புதிய பிரசாரத்தினை மேற்கொள்ள உள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.இது குறித்து ஐ.நா. பொதுச்செயலர் பான்கீமூன் கூறுகையில், வாழ வழியில்லாத காரணத்தால் தான் அவர்கள் அகதிகளாக இடம் பெயர்கின்றனர். அதிகரித்து வரும் அகதிகளை கட்டுப்படுத்த சம்மந்தப்பட்ட நாடுகளின் அரசியல் ரீதியான முரண்பாடுகளை களைய தலைவர்கள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்றார்.

## சீனாவில் பஸ் கவிழ்ந்து விபத்து: 17 பேர் பலி

கிழக்குபகுதியான ஜியாங்சு மாகாணத்திலிருந்து கடலோர நகரமான பியூஜியன் மாகாணத்தின் ஷியாமெனிற்கு 45 பேரை ஏற்றி சென்ற பஸ் இன்று அதிகாலை மலைச்சரிவிலிருந்து பள்ளத்தில் கவிழ்ந்ததில் 17 பேர் பலியானதாக சீன ஷின்ஹுவா செய்தி தெரிவிக்கிறது.

சீனாவின் இப்பகுதியில் போக்குவரத் திற்கு அச்சுறுத்தலாக இருந்து வரும் இச்சாலை பாதுகாப்பு கேள்விக்குறியாகவே இருக்கிறது.ஏற்கனவே இப்பகுதியில் கடந்த பிப்ரவரி மாதம் நடந்த பஸ் விபத்தில் 15 பேர் பலியானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் இன்று நடந்த விபத்தில் 17 பேர் பலியாகி விட்டனர். மேலும் 3 பேருக்கு மோசமான காயம் ஏற்பட்டுள்ளது. மீட்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.



தலைமைச் செயலகத்தில்இன்று தொழில்துறை அமைச்சர் பி.தங்கமணி தலைமையில், சர்க்கரைத்துறை செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இதில் தொழில்துறை உயர் அலுவலர்கள், பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் தனி அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## ஜனாதிபதி தேர்தல்:

# பிரணாப்முகர்ஜிக்கு 23 கட்சிகள் ஆதரவு: தெலுங்கு தேசமும் ஆதரிக்க முடிவு

புதுடெல்லி, ஜுன். 20-

புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் அடுத்த மாதம் (ஜுலை) 19-ந்தேதி நடைபெற உள்ளது. மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி கட்சிகள் சார்பில் மத்திய நிதி மந்திரி பிரணாப் முகர்ஜி போட்டியிடுகிறார். அ.தி.மு.க.-பிஜு ஜனதா தளம் சார்பில் முன்னாள் சபாநாயகர் பி.ஏ.சங்மா நிறுத்தப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் அப்துல்கலாம் போட்டியிட கூடும் என்ற எதிர்பார்ப்பு நிலவிய போது, தேர்தலில் கடும் போட்டி ஏற்படலாம் என்ற நிலை இருந்தது. ஆனால் அப்துல்கலாம் போட்டியிடவில்லை என்று அறிவித்த பிறகு ஜனாதிபதி தேர்தல் களம் விறுவிறுப்பு இல்லாமல் போய்விட்டது. பிரதான எதிர்க்கட்சியான பாரதீய ஜனதா தனது கூட்டணியில் உள்ள தோழமை கட்சிகளின் அதிரடி முடிவால் அடுத்து என்ன செய்வது என்பதை கூட தீர்மானிக்க முடியாதபடி குழம்பி போய் உள்ளது.

சங்மாவை வேறு வழியின்றி பா.ஜ.க. ஆதரிக்கும் என்று தகவல்கள் வெளியாகி உள்ளது. எதிர்க்கட்சிகள் துண்டு, துண்டாக பிரிந்து விட்ட நிலையில் ஆளும் கட்சி சார்பில் நிறுத்தப்பட்டுள்ள பிரணாப்முகர்ஜிக்கு ஆதரவு பெருகியபடி உள்ளது. தற்போதைய நிலவரப்படி பிரணாப் முகர்ஜிக்கு பிரதிநிதித்துவம் உள்ள 23 கட்சிகளின் ஆதரவு கிடைத்துள்ளது. காங்கிரஸ் கூட்டணியில் இடம் பெற்றுள்ள கட்சிகளில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சி தவிர மற்ற எல்லா கட்சிகளும் பிரணாப் முகர்ஜியை ஓரணியில் நின்று ஆதரிக்கின்றன.

பாரதீய ஜனதா கூட்டணியில் முக்கிய அங்கம் வகிக்கும் ஐக்கிய ஜனதா தளம், சிவ சேனா, அகாலி தளம் கட்சிகளும் பிரணாப் முகர்ஜியை ஆதரிப்பது குறிப்பிடத்தக்கது. அது போல காங்கிரஸ், பா.ஜ.க. தலைமையிலான கூட்டணிகளில் எந்த பக்கமும் இல்லாமல் இருக்கும் சமாஜ்வாடி, பகுஜன் சமாஜ் கட்சிகளும் பிரணாப் முகர்ஜியை ஆதரிக்கின்றன.

காங்கிரஸ், பா.ஜ.க. கூட்டணிகளுக்கு மாற்றாக 3-வது அணியாக உருவாகி வந்த கட்சிகளில் பெரும்பாலான கட்சிகள் பிரணாப்முகர்ஜி ஜனாதிபதியாக வருவதை விரும்புகின்றன. இந்த நிலையில் சந்திரபாபு நாயுடு தலைமையிலான தெலுங்கு தேசம் கட்சியும் பிரணாப்முகர்ஜிக்கு ஆதரவான நிலையை எடுக்க முடிவு செய்துள்ளது.

ஆந்திராவில் காங்கிரசும் தெலுங்கு தேசமும் எதிரிகளாக உள்ளன. என்றாலும் தற்போதைய அரசியல் சூழ்நிலையை கருத்தில் கொண்டு சந்திரபாபு நாயுடு பிரணாப்முகர்ஜியை ஆதரிக்க திட்டமிட்டுள்ளார். இந்த நிலையில் இடதுசாரி கட்சிகள் நாளை (வியாழக் கிழமை) கூடி பிரணாப் முகர்ஜிக்கு ஆதரவு தெரிவிப்பது தொடர்பாக அதிகாரப் பூர்வ மாக அறிவிக்க உள்ளன.

இதற்கிடையே பிரணாப் முகர்ஜிக்கு பா.ஜ.க. மூத்த தலைவர்களிடமும் ஆதரவு கிடைக்க தொடங்கியது. பா.ஜ.க. தலைவர்களில் ஒருவரான மேனகாகாந்தி கடந்த சில தினங்களாக பிரணாப்முகர்ஜிக்கு ஆதரவாக பேசி வருகிறார். பா.ஜ.க. எம்.பி. குகும்தேவ் நாராயண் யாதவ் என்பவர் பிரணாப்முகர்ஜியை ஆதரிப்பதாக வெளிப்படையாகவே ஆதரித்துள்ளார். கர்நாடக முன்னாள் முதல்-மந்திரி எடியூரப்பாவும் மறைமுகமாக பிரணாப்முகர்ஜிக்கு சாதகமாக செயல்படுவதாக தெரிய வந்துள்ளது.

## உலகில் அரியவகையான ஏ-1 பி நெகடிவ் ரத்தம் கொண்ட

# எஸ்.எஸ்.எம். சதக்கத்துல்லாஹ் 40 தடவை ரத்ததானம்

## டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலை பாராட்டு

சென்னை, ஜுன்.20:

உலக ரத்ததானம் செய்வோர் தினம் உலகம் முழுவதும் ஜுன் 14 வியாழக்கிழமை கடைபிடிக்கப்பட்டது. இதையொட்டி சென்னையில் உள்ள தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி. ஆர். மருத்துவ பல்கலைக் கழகத்தின் செனட் ஹாலில் சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர் மயில்வாகனன் நடராஜன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய தலைவர் ஆர். நடராஜ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விருது மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.

### அரியவகை ரத்தம் கொண்ட எஸ்.எஸ்.எம். சதக்கத்துல்லாஹ்

தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டினத்தை சார்ந்த - மர்ஹூம் ஷேக் ஷம்சுத்தீன் மக்கீ குமாரர் எஸ்.எஸ்.எம். சதக்கதுல்லாஹ் இந்த பாராட்டை பெற்றவர்களில் குறிப்பிடத்தக்கவர்.

உலகில் 1 சதவீதத்திற்கும் குறைவானவர்களுக்கே உள்ள A1B Negative ரத்த வகையை பெற்ற இவர். இதுவரை 40 முறை ரத்ததானம் செய்ததற் காக பாராட்டும் சான்றிதழும் இவ்விழாவில் பெற்றார்.

சிறந்த பொதுநல ஊழியரான இவர் சென்னை மண்ணடி முத்துமாரி செட்டி தெருவில் ரியல் எஸ்டேட் மற்றும் கட்டிட நிர்வகிக்கும் தொழில் செய்கிறார். இவரை துணைவேந்தர் மயில் வாகனன் நடராஜன், தேர்வா ணைய தலைவர் ஆர். நடராஜ் வெகுவாக பாராட்டினர்.

இவரது வளைய தளம் www.sadaqathullah.com/blood.html



Manichudar - Tamil Daily RNI 42728 \ 87 Printed and Published by K.A.M. Muhammed Abubacker, on behalf of Madras Media Pvt.Ltd at Madras Media Press, No.36, Maraikayar Lebbai Street, Mannady, Chennai - 600 001. E-Mail.: manichudar786@yahoo.com Phone : 25217890, 25261786, Fax: 25217786 Editor: Prof. K.M. Kader Mohideen, M.A.,